ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ திருப்பதி திருவேங்கடமுடையான்

# சுண்டல் பாட்டு என்னும்

## ஸ்ரீ வெங்கடேஸ்வரருக்கும், ஓர்கிழவிக்கும் நடந்த சம்வாதபாட்டு.




திருமலை

M. ஹரிபூஷணம் நாயுடவர்களால்

தமிழ் நடையில் இயற்றி


---


திருப்பதி பஜார் தெருவு புஸ்தகவியாபாரம்

M. V. ருத்ரப்ப நாயுடு அவர்களால்

பிரசுரிக்கப்பட்டது.

(ரிஜிஸ்டர்காபிரைட்) 1931. (விலை [illegible] 6)

முரஹரி பிரெஸ், சென்னை.

# புஸ்தக விளம்பரம்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஸ்ரீ திருப்பதி பக்த விஜயம் | 1 | 0 | 0 |
| ஸ்ரீ வராக திருவேங்கட ஸ்தலப்புராண யாத்ரா பூஷணம் | 0 | 6 | 0 |
| ஸ்ரீ திருவேங்கட சதகம் | 0 | 3 | 0 |
| ஸ்ரீ திருவேங்கடமுடையான் கதைகள் | 0 | 4 | 0 |
| வீணை தீர்த்த வெங்கடேசன் | 0 | 2 | 0 |
| ஸ்ரீ வெங்கடேசபெருமாள் சாக்ஷிசொன்ன சரிதை | 0 | 1 | 0 |
| ஸ்ரீ வெங்கடேச நாமாம்ருத நடையலங்கார தோத்திரம் | 0 | 1 | 0 |
| திருவேங்கட முடையான் பக்திரச பஜனை கீர்த்தனை | 0 | 1 | 0 |
| தோ வண்டிக்கால் சரிதை | 0 | 8 | 0 |
| ஷேடி வசனம் | 0 | 1 | 6 |
| ஸ்ரீ அலமேலு மங்கை யம்பன் சக்களத்திமார் போராட்ட கொண்டாட்டம் | 0 | 1 | 0 |
| ஏழுமலை வெண்பா | 0 | 1 | 0 |
| வெங்கடேச த்பானும்ருதம் | 0 | 4 | 0 |
| திருவேங்கட முடையான் சுண்டல் பாட்டு | 0 | 1 | 6 |
| வெங்கடேசர் பஜனை கீர்த்தனை 4-பாகமும் அடங்கியது | 0 | 5 | 0 |

இவைபோன்ற பல திருப்பதி க்ஷேத்திரத்தைப் பற்றிய புத்தகங்களை கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

**ஸ்ரீ. ஹரிபூஷணம் நாயுடு,**
ஸ்ரீ வெங்கடேஸ்வரர் புக்டிபோ,
திருமலை போஸ்டு,
சித்தூர் ஜில்லா.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீ திருப்பதி

திருவேங்கடமுடையான்

சுண்டல் பாட்டு என்னும்

# ஸ்ரீவெங்கடேஸ்வரருக்கும்

## ஓர் கிழவிக்கும் நடந்த சம்வாதபாட்டு

இஃது

ஸ்ரீ ப்ருஹத் வாசிஷ்ட பீட பரம்பரை

ஸ்ரீமான் அரங்கப் பிரகாச ஸ்வாமிகள்

தெலுங்கு நடையில் இயற்றியதை

---

திருமலை

**M. ஹரிபூஷணம் நாயுடவர்களால்**

தமிழ் நடையில் இயற்றி

---

பி. எல். வெங்கண்ண ராவ் அவர்களால்

பார்வையிடப்பட்டு

---

திருப்பதி பஜார் தெருவு புஸ்தகவியாபாரம்

**M. V. ருத்ரய்ய நாயுடு அவர்களால்**

---

சென்னை "முராஹரி" அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப் பெற்றது.

1930.

(ரிஜிஷ்டர் காபிரைட்) (விலை [illegible] 6)

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனுல் அறிவிப்பது யாதெனில், இப்புத்தகத்தின் வசனத்தையும், பாட்டையும், கவர்ன்மெண்டார் புக் ரிஜிஸ்டர் காபி ரைட் ஆக்டின்படிக்கு ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. இதிலுள்ள வார்த்தைகளை வேறுவிதமாக அச்சிட்டால் இதனுல் ஏற்படும் நஷ்டத்திற்கு பாத்தியப்படுவார்கள் என்பதை தெரிவிக்கப்பட்டது.

இம்படிக்கு,

SREE VENKATESWARA BOOK DEPOT

**M. V. Rudraiah Naidu**

Publisher

*Tirupati*

ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்.

ஸ்ரீ திருப்பதி திருவேங்கடமுடையான்

சுண்டல் பாட்டு என்னும்

# ஸ்ரீவெங்கடேஸ்வரருக்கும்

## ஓர் கிழவிக்கும் நடந்த சம்வாத பாட்டு.

### திருமால் துதி.

திருவேங்கடவா வென்று தேடி கொண்டாடி
உன் திருவடியை மனதில் நாட்டி
மரவாமல் துதிசெய்ய மலைபோன்ற பாவமும்
மாண்டு போம் மரண பவமும்
எரிகின்ற தீயிலே எரிந்திட்ட பஞ்சுபோல்
எவ்வித மான பாவமும்
திருமலையில் வாழ்ந்திடும் தேவகண பொன்மலரியே
"திருவேங் கடத்து மணியே."

ஸ்ரீ வைகுண்டத்தில் எம்பெருமானுகிய மகா விஷ்ணு வானவர் லக்குமி தேவியுடன் ஆதிசேஷனுடைய சயனத்தில் ஆனந்தமாய் படுத்திருக்கும் சமயத்தில் சத்தியலோகத்தில் பிரமனுக்கு சாபம் கொடுத்து விட்டு, கைலாசத்தில் ஈஸ்வரனுக்கு சாபத்தைக் கொடுத்து விட்டும் வந்த பிருகுமகா ரிஷியானவர் லக்ஷிமி சமேதமாய் இருக்கும்படியான விஷ்ணு பேரில் கோபம்கொண்டு ரிஷி காலால் உதைத்தார், விஷ்ணு அவர் மீது கோபித்துக்கொள்ளா திருக்கக்கண்டு லக்ஷ்மியானவள் கோபம் கொண்டு விஷ்ணுவை வைகுண்டத்தில் ஏகாங்கியாக விட்டு விட்டு தான் மாத்திரம் கலியுகத்தில் 'கொல்லாபுரம்'' என்னும் ஊருக்குப் புறப்பட்டு வந்துவிட்டாள்.

விஷ்ணுவும் வைகுண்டத்திலிருக்க மனமில்லாதவராய், கலியுக வைகுண்ட மென்னும் திருப்பதி மலையில் பிரம்மதேவனால் சிருஷ்டிக்கப்பட்ட வல்மீகமென்னும் புற்றில் வசித்துவந்தார். சேஷாசலமென வழங்கிவரும் இத்திருப்பதி மலையில் முன்காலத்தில் அளவற்ற முனிவராஸ்ரமங்களிருந்தன, அவ்வாஸ்ரமங்களில் அநேகமான சாதுக்களும், யோகிஸ்வரர்களும்; சதா பிரம்ம நிஷ்டையில் மூழ்கி பரந்தாமனுடைய திரு உருவத்தை மனதில் நினைத்துக்கொண்டும், அவருடைய திருக்கலியாண குணங்களை தியானித்துக்கொண்டும் காலம் கழித்து வந்தார்கள்.

அக்காலத்தில் இப்போதிருக்கும் தென் மாட வீதியில், அஸ்வாலயத்தில் ஓர் ஆஸ்ரமும் ஓர் அரசமரமும் இருந்தன, ஈதிங்ஙன மிருக்க சித்தூர் ஜில்லா சந்திரகிரியைச் சேர்ந்த மங்காபுர மென்னும் ஊரில் "கங்கம்மாள்" என்னும் பெயர்பூண்ட ஓர் கிழவி யிருந்தாள். அக்கிழவி சாதுக்களுடைய சேவையை செய்து கடவுளின் பேரருளைப் பெற்று முக்தி யடையலாமென்ற எண்ணத்தின் பேரில், ஓர் நாள் அதிகாலையில் எழுந்து ஸ்நாந பானுதி அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு எவ்விதத்தில் சாதுக்களையும்; எம்பெருமானையும் காணலாம் என்ற எண்ணத்தில் மூழ்கினாள், பின் ஓர் யோசனை தன் மனதில் தோன்ற சிலது காராமணி என்னும் தானியத்தை சுண்டலாக சமைத்துக்கொண்டு பக்தி சிரத்தையுடன் அதனை எடுத்துக்கொண்டு திருப்பதி மலையைச் சேர்ந்தாள்.

அவ்விடம் அஸ்வ சாலையின் அருகாமையில் பல ஆஸ்ரமங்களில் வசித்துவரும் சாதுக்களுக்கு அச்சுண்டலை கொடுத்ததும் அவ்வாஸ்ரமங்களைச் சுத்தஞ் செய்தும், மெழுகியும், கோலமிட்டும், மற்றும் பல விதமான தொண்டுகளைச் செய்தும் போனாள். நாடோறும் அதேப்பிரகாரம் செய்துக்கொண்டு வந்தாள்.

அப்படியே பலகாலம் வரை அச்சாதுக்களுக்கு தொண்டு புரிந்துக்கொண்டு வர, அக்கிழவிக்கு சத்கதியடையவேண்டுமென்ற எண்ணம் உதித்தது. வழக்கப்படியே ஓர்நாள் சுண்டல் சமைத்து கொண்டு வந்து அம்முனிவர்களுக்கு சமர்ப்பித்துவிட்டு மற்றும் பல வேலைகளைக் கிரமமாக செய்துவிட்டு சாதுக்கள் முன்னிலையில் தோன்றி சாஷ்டாங்கமாய் தெண்டம் சமர்ப்பித்து பின்வருமாறு வேண்டலானாள். தவத்தில்

சிறந்த சாதுக்களே! நான் மோக்ஷம் என்னும் பேரின்ப வீட்டை யடைய யாதொரு உபாயமும் அறிகிலேன். திரிகாலக் கியானிகளாகிய தாங்கள் அடியேன் பேரில் கிருபைகூர்ந்து மோக்ஷமாகிய ஸாஸ்வத பேரின்பவீட்டை நான் அடைய வழியாதோ தெரிவிப்பீர்களென, அந்த யோகிஸ்வரர்கள் யாதொரு மறுமொழியும் கூறுமல் ஒருவர் முகத்தை யொருவர் பார்க்கலானார்கள்.

வெகு நேரமாயும் அம்முனீஸ்வரர்கள் யாதொரு மறுமொழியுங் கூறுததைக்கண்ட கிழவி மிகவும் சிந்தாக்கிராந்தையாய் "இதென்ன என்னுடைய துர் அதிர்ஷ்டம்: பல நாட்களாக இம்முனீஸ்வரர்கள் என்னுடன் பேசிக்கொண்டும், எம்பெருமானுடைய திருக்கலியாண குணங்களை கூறிக்கொண்டும், அவருடைய மங்களஸ்வரூபத்தை வர்ணித்துக்கொண்டும், ஆதி கர்த்தாவுடைய ஆச்சரிய கதைகளைச் சொல்லிக்கொண்டும் இருந்தவர்கள் இன்றையதினம் யான் கேட்டதற்கு யாதொரு விடையும் பகருமல் மவுனம் சாதித்துக்கொண்டிருக்கின்றனர், இதுவும் என் வினைப்பயனே போல் காண்கின்றது. யாது யோசனையும் புரியவில்லையே, ஆகட்டும் இன்னும் சிலநேரம் பார்க்கிறேன். யோகிகள் என்மேல் தயைகூர்ந்து நான் கேட்டதற்கு பதில் கூறுமலே இருப்பார்களாகில் இவ்விடம் கிடக்கும் பாரையின்மேல் தலையை மோதிக்கொண்டு பிராணனை விடுகிறேன். என தீர்மானம் செய்துக்கொண்டு அக்கிழவி மறுபடியும் அம்முனீஸ்வரர்களின் காலில் விழுந்து "உத்தம சாதுக்களே! நான் கேட்டதற்கு நீங்கள் யாதொரு மறுமொழியும் திருவாய் மலர்ந்தருளாமல் மவுனம் சாதிக்கிறீர்கள், நான் உய்யும் உபாயத்தை தாங்கள் தயைகூர்ந்து தெரிவிக்காவிடில் என் பிராணனை நான் இவ்விடமே ஒழித்துக்கொள்ளுவேன்" என்று எதிரில் கிடந்த பெரிய பாராங்கல்லின்மேல் தன் தலையை இடித்துக்கொள்ள முயற்சித்தாள்.

அதனைக்கண்ட அம்முனிகள் மனந்தாளாதவர்களாய் அக்கிழவியை அழைத்து அருகாமையில் உட்காரவைத்துக்கொண்டு "ஓ! கிழவியே! நாங்கள் ஆயிரக்கணக்கான வருடங்களாய் தவம் செய்துக்கொண்டிருந்தும் அம்மகானுடைய தயை கிட்டவில்லை, அப்படியிருக்க நீ அல்பம் பனிரண்டு வருடங்களாய் எங்களுக்கு சேர்வைசெய்த மாத்திரத்திலேயே எம்பெருமானுடைய அருள் உனக்கு எப்படி கிடைக்கும்

ஆனல் உன் முற்பிறப்பின் வினை எங்ஙனமிருக்குமோ? பூர்வ ஜென்ம ஸுகிருத்தியத்தினுல் நீ திருமாலுடைய அருளை எய்தினும் எய்தக் கூடும். "எமக்குத்தோன்றிய ஓர் யோசனை கூறுகின்றோம், அதின்படி நடப்பாயே யானல் திருவேங்கட முடையான் உனக்கு எளிதில் அகப் பட்டு விடுவார்" என்று கூறிய மாத்திரத்தில் கிழவி சந்தோஷங்கொண் டவளாய், "என் முக்திக்கு மூலகர்த்தர்களே! ஆபத் பந்துக்களே? அனுதையாகிய எனக்கு ரக்ஷகர்களே? இக்கணமே அத்திருப்பார்கடல் சயனனின், அக்காருண்ய மூர்த்தியின், அக் கரியை காத்த கமலகண்ண னின், அந்த லக்ஷிமி சமேத நாராயண மூர்த்தியின் அருள்" எனக்குக் கிடைக்கும்படியான அவ்வரிய உபாயத்தைக் கூறும்படியாக வேண்டு கின்றேன் என்று அம்முனிக்கணங்களின் கால்களில்விழ்ந்து மன்றாடிக் கேட்டுக்கொண்டனள்.

அக்கிழவியின் மொழிகளைக் கேட்ட முனிஸ்வரர்கள் சந்தோஷங் கொண்டவர்களாய், பாட்டி! தற்காலத்தில், பரந்தாமன் வைகுண் டத்தை விட்டுவிட்டு அடியார்களை ஆட்கொண்டருள்வதின் நிமித்தம் அதோ அருகாமையில் தெரிகின்றதே அப்புற்றில்தான் வசித்துவருகி ருர், அப்புற்றிற்கு அருகாமையில் "திந்திரிணி" என்னும் புளியமர மொன்று காணப்படுகின்றதல்லவா? நீ சுண்டலைத் தயார் செய்துக் கொண்டு, அம்மரத்தடியில் காத்துக்கொண்டிருப்பாயே யாகில் உலக ரக்ஷகராகிய ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமாள், ஜடா மகுட தாரியாய் புற்றிலிருந்து வெளிவருவார். அச்சமயம் பார்த்து நீ அவ்விடம்சென்று நமஸ்கரித்து உன்னிடமிருக்கும் சுண்டலை அவருக்குச் சமர்ப்பித்து, அவர் அதை புசித்த பின் அந்த சுண்டலின் கிரயம் ஒரு பணமென்று சொல்லி அதைக் கேளும், அவர் அதற்கு நாளை தருவதாய் சொல்லு வார், பிறகு உன் புத்தி சூட்சுமத்தினுல் நீ அவருடைய பாதார விந் தம் சேரலாம், இதுதான் தகுந்த உபாயம், அத்திருவேங்கட முடை யான் உனக்கு தவராமல் மோக்ஷத்தை அளிப்பார்" என்று கூறினுர் கள்.

அவ்வவ்வை மிகவும் சந்தோஷம் கொண்டவளாய், அம்முனிவர் களின் பாதங்களில் மற்றுமோர் முறை வீழ்ந்து நமஸ்கரித்துவிட்டு அன்னவர்களின் உத்திரவு பெற்றுக்கொண்டு தன் ஊர் போய்ச் சேர்ந் தாள்.

மறுநாள் அதிகாலையில் எழுந்து ஸ்நானபானாதி அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு திருவேங்கட முடையானின் திருவடிகளையே நினைத்தவளாய் வெகு சீக்கிரத்தில் சுண்டலை தயார்செய்துக் கொண்டு, ஹரிநாமத்தையே பாராயணம் செய்தவளாய் சேஷாசலத்தை நோக்கி புரப்பட்டாள். மலையைச் சேர்ந்ததும், ஸ்வாமி புஷ்கரணியில் ஸ்நாநம் செய்து விட்டு, மிகவும் பய பக்தியுடன் வல்மீகம் என்னும் புற்றிற்குச் சமீபமிருக்கும் புளிய மரத்தின் கீழ் போய் எப்பொழுது அவ்வுலகளந்த மாயனைக் காணலாம், எப்போது அந்த ஸாந்த ஸ்வரூபனாகிய ஸாக்ஷாத் விஷ்ணுவைக் காணலாம் என்னும் ஒருநினைவில் ஏக்கங் கொண்டவளாய் புற்றை நோக்கிய வாரே அவ்விடம் காத்துக் கொண்டிருந்தாள்.

சிலது நேரம் சென்றதும் அப்புற்றிலிருந்து ஓர் வயோதிக பிராம்மண உருவத்துடன் ஒன்றும் அறியாதவரைப் போல் எம்பெருமான் வெளிக் கிளம்பினார், அன்னவரின் தேகத்தில் எலும்பும் தோலும் தவிர வேறில்லை, ஓர் அடி எடுத்து வைத்த மாத்திரத்தில் பத்து இடங்களில் பிறழ்ந்து விழுந்துவிடக் கூடியவராய் இருந்தார், ஆனால் அவரது வயோதிகத்தைப் பற்றி அதிகம் கூறத் தேவை யில்லை, எம்பெருமானுக்காக காத்துக் கொண்டிருந்த கிழவியானவள் அத்தளாத கிழவரைக் கண்டதும், முனிவர்கள் கூறியபடியே'' எம்பெருமான் புற்றிலிருந்து வெளிவருவார்'' என்று சொல்லி யிருந்ததை நினைத்துக் கொண்டு, ஸ்ரீமன் நாராயண மூர்த்தியே மாறுவேடம் பூண்டு எழுந்தருளி யிருக்கிறார் என்று சந்தேக மற்றவளாய், அவரிடம் சென்று, ஓ! மகானுபாவரே! உம்மைப் பார்த்தால் பசியினால் களைப் புண்டவரைப்போல் காணப்படுகிறது, என்னிட மிருக்கும் சுண்டலைத் தின்று பசியை தணித்துக் கொள்ளுங்கள், எனக்கூறி தன்வசமிருந்த சுண்டலில் கொஞ்சம் கொடுத்தாள், அவற்றினால் தன் பசி தணியாதவரைப் போல் நடித்து இன்னுங்கொஞ்சங் கொடு? இன்னுங் கொஞ்சங் கொடு? என்று கிழவியினிட மிருந்தவற்றை எல்லாம் சாப்பிட்டு, பசிதீர்ந்தவரைப் போல் அபிநயித்து, "உஸ்! அப்பா! இப்போதுதான் என் பசி சுமாராய் தணிந்தது'' என்று கூறி தன் முன் நிற்கின்ற கிழவியை நோக்கியவராய், ''அம்மா? நீ எந்தவூர், உன் பெயர் என்ன? உனக்கு புருஷன் இருக்கிறானா? உனக்குப் பிள்ளைகளிருக்கிறார்களா? நீங்கள் எவ்விதமான தொழில் செய்து ஜீவனம் செய்கிறீர்கள்?'' என்னும் பல

கேள்விகளை இடையிடையே பெருமூச்சுக்களை விட்டுகொண்டு கேட்டார்.

எம்பெருமாளுடைய ஜாலவித்தைகளைக் கண்ட கிழவி தன் மனதில் சந்தோஷ மடைந்தவளாய் அய்யா! பெரியவரே? நான்பாராயிருந்தாலும் உமக்காகவேண்டியதென்ன? நான் எந்த ஊரானாலும் உமக்கென்ன? ஆனல் நான் சுண்டலை விற்று பிழைக்கக் கூடியவள், இப்போது நீர் சாப்பிட்ட சுண்டலுக்கு தகுந்த விலையைக்கொடும், நான் போகவேண்டும் என்று பதில் கூறினள்.

ஓ! கிழவியே! நீ முதலில் சுண்டலை கிரயத்திற்கு என்று சொல்லி எனக்குக் கொடுத்தாயா? இல்லையே? அப்படி யிருக்க, சாப்பிட்டு ஆன பிறகு சுண்டலின் கிரயத்தைக் கேட்டால் கொடுக்க என்ன நியாய மிருக்கிறது. அப்படிக்கும் கொடுத்து விடலாமென்ருல், தள்ளாத கிழவனுகிய என்னிடம் பணம் ஏது? நீயோ பணம் கொடென்று கோபித்துக்கொள்ளுகிருய், என்னிடமோ பணம் இல்லை, இப்போது நான் என்ன செய்யக்கூடும், என்று ஆழ்ந்த யோசனை செய்பவரைப்போல் தலையை கிழே குனிந்துக்கொண்டிருந்து, பிறகு நிமிர்ந்து நின்றுக் கொண்டு, "பாட்டீ! கோபித்துக்கொள்ளாதே; நாளையதினம் நீ மறுபடியும் சுண்டல் எடுத்துக்கொண்டுவா பணத்தை நாளையதினம் கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டு புறப்பட்டு போய்விட்டார்.

அப்படி தப்பித்துக்கொண்டு போய்விட்ட எம்பெருமானை நினைத்து கிழவி மிகவும் விசாரப்பட்டு, பிறகு "இனி திருவேங்கட முடையான் எனக்கு சிக்கிவிட்டார். இன்றைக்கில்லாமற் போனுலும் நாளை அகப்படுவார், நாளை விடமாட்டேன்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டு போய்விட்டாள். இன்றைக்கும் கிழவி திருவேங்கட முடையானை பணம் கேட்பது அவர் நாளை கொடுக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு வருவதையே "இக் கீழ் கண்டிருக்கும்" ஸ்ரீ திருவேங்கட முடையான் சுண்டல் பாட்டை படித்தால் நன்கு விளங்கும்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ திருப்பதி

திருவேங்கடமுடையான் பேரில்

# சுண்டல் பாட்டு.



ஸ்ரீ வெங்கடேஸ்வரருக்கும்

ஓர் கிழவிக்கும் நடந்த சம்வாத பாட்டு.

இராகம் - செஞ்சுருட்டி - தாளம் - ஆதி.

(கிழவி.)

எம்பெருமான் என்று சுண்டலை விற்றேன் யான்
கோவிந்தா கடன் ஏனோ கொடுக்க மாட்டீர்
எப்போது கேட்டாலும் தப்பாமல் கெடுவுகள்
சொல்வது சரியல்ல வெங்கடேசா (௧)

### வெங்கடேஸ்வரர்.

உண்மையாக நானே இவ்விடம் வந்து நான்
பணத்தை கொடுக்குறேன் பாட்டியம்மா
வம்பான வார்த்தைகள் பேசாமல் சென்றுநீ
பணத்தை பெற்றுக்கொண்டு செல்வாயம்மா (உ)

### (கிழவி.)

கெடுவுகள் சொல்லவும் மனம் கூசுவாபோ நீ
இனி செல்லமாட்டேன் நான் வெங்கடேஸா
மடியிலிருக்கும் பணம் கொடுக்காவிட்டா லுன்னை
இனி போகவிட மாட்டேன் வெங்கடேசா (எ)

### வெங்கடேஸ்வரர்.

நானை பணம்கொடுக்க யாதொரு தடையில்லை
கோபம் செய்யவேண்டாம் இந்தவேளை
வேளை தப்பாமல் நான் பணத்தை கொண்டுவந்துன்
கோபந் தணிப்பேன் நானை பாருமம்மா (உ)

### (கிழவி.)

சந்துவீதியில் கேற்று சந்தடி யில்லாமல்
மந்த ஹாஸம்விட்டு மவுனமுடன்
எந்த வீதிசென்றாய் சுந்திர பாதார
விந்த உந்தனை நான் விடுவேனோ (எ)

### வெங்கடேஸ்வரர்.

திருவீதிகளிலே நான் தேர்மீதில் செல்லும்போது
கைதனில் காசேது சொல்லுமம்மா
பரம ரகஸியமாய் சென்று விட்டேன் என்
கைதனைவிட்டு நீ மன்னிப்பாயே (உ)

### (கிழவி.)

ரொக்கமில்லை யென்று சாக்குகள் சொல்லவும்
ஒப்பத் தகுந்ததோ ஸ்ரீ வெங்கடேஸா

தக்க வார்த்தை சொல்லி பணத்தைகொடுக்காவிடில்
அப்புறமேத உன்னை விடமாட்டேன் (எ)

### வெங்கடேஷ்வரர்.

என்றைக்கும் பிரியாத லக்ஷிமி தேவியைவிட்டு
வைகுண்டத்தைவிட்டு ஏகாங்கியாய்
சன்னியாசி போலவே திரிகின்ற என்னிடம்
பைசாக்கள் ஏது நீ சொல்வாயம்மா (உ)

### (கிழவி.)

ரொக்கமில்லை என்று சாக்குகள் சொல்லிவந்தால்
பாக்கி கொடுப்ப தெப்போ வெங்கடேஸா
எக்காலமாகிலும் எந்தன் ஒரு பணத்தை
கொடுத்தே நீ தீரவேண்டும் வெங்கடேஸா (எ)

### வெங்கடேஷ்வரர்

இவ்வுலகத்திலுள்ள என் நிஜபக்தர்களை
எவ்விதமாகிலும் வரவழைத்து
அவ்வையாரிடம் சுண்டல் புசித்தேனென்று
பிச்சைகேட்டாகிலும் தீர்ப்பேனம்மா (உ)

### (கிழவி.)

சுண்டல் புசித்த கடன் வைத்துக்கொண்டு நீறும்
நிஷ்டூரமாய்ப்பேச நியாயமாமோ
பெண்பிள்ளையாகிய எந்தனை நீர்தினம்
கஷ்டப்படுத்துவதும் தர்மமாமோ (எ)

### வெங்கடேஸ்வரர்.

நிஷ்டூரம் செய்யவில்லை வந்தனம் செய்கின்றேன்
யாரையாகிலும் பிச்சை கேட்டு உன்னை
கஷ்டப்படுத்தாமல் கொடுத்துவிடுகிறேன்
யார் அரிய இது உண்மையம்மா (உ)

(கிழவி.)

இத்தனை யுகங்களாய் ஈரேழுலகங்களில்
எத்தனை பக்தர்களை காத்தாயோ நீ
உத்தமமாமுனி வோருக்குபகாரனே
சித்தம்வைத்து என்னை ஆட்கொள்வாயே (எ)

வெங்கடேஸ்வரர்.

அரியாத பாலன் நான் தெரியாமல் செய்ததை
பொறுத்துக்கொண்டு கொஞ்சம் நாளிருப்பாய்
பிரியமாய் வட்டியையும் முதலுடன் சேர்த்துநான்
பொறுமையாய் உனக்கு அளிப்பேனம்மா (உ)

(கிழவி.)

நாளை என்று நிதம் கெடுவுகள் சொல்லி நீ
வருடக் கணக்குகளாய் ஆக்கிவிட்டாய்
ஏழையாகிய என்னை ஆட்கொண்டருளாமலே
பராமுகம் செய்வது நியாயமாமோ (எ)

வெங்கடேஸ்வரர்.

அன்புடன் பக்தர்களை காத்துரக்ஷித்ததுபோல
கலியுகமத்திய காலத்திலே
இன்பமாய் கொண்டாடி அசலையும் வட்டியையும்
காலந்தவரிடாமல் கொடுப்பேனம்மா (உ)

(கிழவி.)

இனியாகிலும் எந்தன் வார்த்தைக்கிறங்கி நீ
எந்தனைக் கார்ப்பதாய் சொன்னதுபோல்
தாஸர்க்குத்தாஸனும் ஹரிபூஷணமாகிய
தாசனை கார்த்தருள்வாய் வெங்கடேசா (எ)

வெங்கடேஸ்வரர்.

கவலை யுனக்குவேண்டாம் கண்டிதமாய் சொன்னேன்
தாசனையும் அவன் தோழனையும்

அன்புடனே கார்த்து ஆட்கொண்டருளுகின்றேன்
இன்பமாய்-என் பஜனை செய்து வாரும் (உ)

வசனம்.

இன்றைக்கும் கலியுக வைகுண்டமென்னும் ஸ்ரீ திருப்பதி மலையில், எம்பெருமானுக்கு உத்ஸவங்கள் நடந்து, திருவீதிகள் தோறும் எழுந்தருளும் போது, தென்மாட வீதியிலுள்ள அஸ்வஸாலையின் சமீபமாக வரும்போது, கிழவிக்குக் கொடுக்க வேண்டியது சுண்டல் கடன் பணத்துக்காக பயந்து தன்னுடைய, மேளவாத்தியங்கள் எல்லாவற்றையும் நிறுத்திவிட்டு, கிழவிக்குத் தெரியாமல் பயந்து செல்வது என்ன விநோதம். எம்பெருமானுடைய திருவிளையாட்டுகளில் இதுவும் ஒன்றாக யிருக்கிறது. ஆயிரம் சிறங்கள் கொண்ட அந்த ஆதிசேஷனாலும், லோக கர்த்தாவாகிய எம்பெருமானின் குணாதிசயங்களைப் புகழ்ந்து கூற முடியாமலிருக்க கேவலம் மானிடப் பிறவிவாய்ந்த எங்களால் என்ன முடியும்? ஸகல லோகைக நாதனாயிருக்கின்ற ஸ்ரீ திருவேங்கடமுடையான் எல்லோரையும் கார்த்து ரக்ஷிப்பாராக.

---

(காட்சி கண் காட்சியே - என்றமெட்டு)

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஆதி.

(பல்லவி)

காண ஸந்தோஷமே கலியுக வைகுண்டத்தை (கா)

(அநுபல்லவி)

கர்மவினை தீரச்செய்யும் காருண்யன்வாழ் திருப்பதிமலை (கா)

(சரணங்கள்)

ஸ்வாமி புஷ்கரணியில் இன்பமாய் நீராடுவோரும்
ப்ரேமி வராகன் கோவில் முன்னின்று துதிப்போரும்
பாவங்கள் நீக்கிக்கொள்ள கோவிலதை சுற்றுவோரும்
நாவினில் துதிசெய்து நற்பதவி தேடுவோரும்

உத்தம பக்தஜனங்கள் கூட்டம்—எங்கும்
சத்தம் கோவிந்தாவென்றார்ப்பாட்டம்—அங்கு
சித்தருடன் முத்தருமே தேட்டம்—பலர்
நித்தமும் செய்யும் பஜனை கோஷ்டம்

கேட்க மன நாட்டம்
பக்தி மிக மூட்டும்
தாஸன் வெங்கப்பன் பாட்டும்
பாட முக்தி கூட்டும்—திருமலை (நாண)

---

(சாமி ஏதையா இந்தவதை என்ற மெட்டு)

இராகம்-பூரிகல்யாணி-தாளம்-ரூபகம்.

(பல்லவி)

சீனிவாசனே பணிந்தேன் ஐயா திருமலை (சீ)

(அநுபல்லவி)

மனமாரவே யான் துதித்தேன் என் வினையோடிட
எனை காத்திட இனிதாகவே வருவாய் ஸ்ரீ (சீ)

(சரணங்கள்)

தொல்லை துயரங்கள் சூழ்ந்திடாமலே
பிறவி வினைகள் தொடர்ந்திடாமலே
அல்லல் பல வந்து அணுகிடாமலே
அன்புடன் என்னை ஆண்டருள்
தென்புடன் என்னை காத்தருள் (சீ)

உலக வாழ்க்கையில் வீழ்ந்திடாமல் என்னை
இல்லற போகத்தால் சூழ்ந்திடாமல் மனம்
உன்னை துதிப்பதில் ஆழ்ந்து கிடக்கவே
கருணை புரிவாய் ஹரியே
அறியேன் உனையல்லாமல் (சீ)

சகல தேவர்க்கும் ஆதிபானவன் ?
கதியுனை பன்றி ஏது தெய்வம் கூற
இகபரங்களில் இன்பம் கிடைத்திட

தாஸன் வெங்கப்பன் பாட்டை
நேஸமுடன் கேட்டருள்வாய் (௪)

---

(ஆகாது—ஆகாது என்ற மெட்டு)

(பல்லவி)

கூடாது கூடாது அனியாய தாசிகளுறவு (கூ)

(அநுபல்லவி)

கொண்டவள் தானிருக்க கோதியவளாயிருக்க
குலத்தை கெடுக்கவந்த கொடிய நெஞ்சு தாசிகளுரவு (கூ)

(சரணங்கள்)

காசுகொடுத்தவரையில் கண்ணே என்பிராணன் என்பார்
துட்டு கொஞ்சம் குறைந்துவிட்டால்
எட்டிகில் என்னும் தாசிகளுரவு (கூ)

மாலை வேளைகள் தன்னில் அலங்கார மாக நின்று
கைகளாட்டிகண்களைகாட்டி அன்புடன்கூப்பிடும்தாசிகளுரவு (கூ)
கையிலிருந்த காசும் போகும் காயத்தின்வலிமை போகும்
கண்டவர்கள் சிறிக்கும்படி நோய் கொடுக்கும் தாசிகளுரவு (கூ)

ஸ்ரீ திருப்பதி வெங்கடேச பெருமாள் பேரில்
சுண்டல் பாட்டு முற்றிற்று.

---

# புஸ்தக விளம்பரம்.

| | ரூ | அ | பை |
|---|---|---|---|
| ஸ்ரீ திருப்பதி பக்த விஜயம் | 1 | 0 | 0 |
| ஸ்ரீ வராக திருவேங்கட ஸ்தலப்புராண யாத்ரா பூஷணம் | 0 | 6 | 0 |
| ஸ்ரீ திருவேங்கட சதகம் | 0 | 3 | 0 |
| ஸ்ரீ திருவேங்கடமுடையான் கதைகள் | 0 | 4 | 0 |
| வினை தீர்த்த வெங்கடேசன் | 0 | 2 | 0 |
| ஸ்ரீவெங்கடேசபெருமாள் சாக்ஷி சொன்னசரிதை | 0 | 1 | 0 |
| ஸ்ரீ வெங்கடேஸ நாமாம்ருதநடை பலங்கார தோத்திரம் | 0 | 1 | 0 |
| திருவேங்கட முடையான் பக்திரச பஜனை கீர்த்தனை | 0 | 1 | 0 |
| தேர் வண்டிக்கால் சரிதை | 0 | 8 | 0 |
| ஷடி வசனம் | 0 | 1 | 6 |
| ஸ்ரீ அலமேலு மங்கையம்மன் சக்களத்திமார் போராட்ட கொண்டாட்டம் | 0 | 1 | 0 |
| எழுமலை வெண்பா | 0 | 1 | 0 |
| வெங்கடேச த்யானும் ருதம் | 0 | 4 | 0 |
| திருவேங்கட முடையான் சுண்டல் பாட்டு | 0 | 1 | 6 |
| வெங்கடேசர் பஜனை கீர்த்தனை 4-பாகமும் அடங்கியது | 0 | 5 | 0 |

☞ இவைபோன்ற பல திருப்பதிக்ஷேத்திரத்தைப் பற்றிய புத்தகங்களை கீழ்கண்ட விலாசித்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

**M. ஹரிபூஷணம் நாயுடு,**

ஸ்ரீ வெங்கடேஸ்வரா புக் டிபோ,

திருமலை போஸ்ட்,

சித்தூர் ஜில்லா.

நவரசம்பொருந்திய நவீனநாவல்! புவனம்புகழ் புதியநாவல்!

உலகானுபவங்களை விளக்கிக்காட்டும் உன்னதநாவல்!

மாமிகளின் கொடுமை! மாமிமார்களின் துயரம்!!

மருமக்களின் கொண்டாட்டம்! மருமக்களின் திண்டாட்டம்!

குடும்பத்தில் ஏற்படும் சச்சரவுகளை விளக்கிக் காட்டுவது!

# மங்கள பூஷணம்

அண்டு

மாமியைவென்ற

# மதிபூஷணம்

## துப்பறியும் செந்தமிழ் நாவல்

## 860-பக்கமுள்ளது விலை 1-4-0

தபால் செலவு வேறு.



**அன்பார்ந்த சகோதர சகோதரிகாள்!**

தற்காலத்தில் மாமிமார்கள் மருமக்கள்மார்களைத் துன்பப்படுத்தி யாதொரு சுதந்திரமுங் கொடாமல் இருப்பதினால் அதனால் நேரிடும் இடையூறுகளை கவனிக்காது போராடுகிறார்கள். அப்படிச் செய்யும் புத்தியில்லாதமாமிகளின்செய்கைகளையும், மருமக்கள் மாரின் புத்தி சாதுர்யத்தினால் இல்லறத்தில் சுகதுக்கம் அனுபவித்து நற்பெயர் பூண்டு கொடுமையுள்ள மாமிகளை வென்று சுகப்படுவது முதலானதுகள் இப்புத்தகத்தில் யாவருக்கும் தெற்றென விளங்குமாறு முன்னோரின் வாக்கியங்களும், பழமொழிகளும், வித்வசிகாமணிகளால் புகட்டிய அரும்பெறும் விஷயங்களும் எழுதி யிருக்கிறது. இதிலுள்ள பலவிஷயங்களை வாசித்து நன்குணரவே இப்புத்தகத்தை வெளியிட்டனம். இப்புத்தகம் ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது, நீங்கள் எத்தனையோ நாவல்களும் கதைகளும் வாசித்திருப்பீர்கள்! அதைப்போல் நாவல்தானே எனமதிக்காதீர்கள்! நீங்கள் இதிலுள்ள விஷயங்களை கட்டாயம் வாசித்துப்பார்க்க கோருகின்றோம்,

இப்புத்தகத்திலுள்ள கதையை கொஞ்சம் கவனியுங்கள்!

துர்ப்புத்தியுள்ள கொடுஞ்சுவி என்பவள் தனதுமுதல் மருமகளாகிய சாந்தமிகுந்த மங்களபூஷணத்தை படாதபாடு படுத்தவும், அம்மாது ஆற்றொணா துயரங்கொண்டு பக்தி வழியில் செல்லவும், அதன்பிறகு மதியிற் சிறந்த மதிபூஷணத்தை தனதுகுமாரனாகிய நியாயசுந்தரத்திற்கு இரண்டாந்தாரமாக கட்டிக்கொண்டதும், அந்தமதிபூஷணத்தையும் தனது சேமனாகிய பன்னகத்தினோடும், தனபாக்கியத்தினோடும், முதல்மருமகளைபோல் இம்சிப்பதும், இதையெல்லாம் கண்ட மதிபூஷணம் மேற்கூறிய மூவரையும் பலவாறு துன்பப்படுத்தி விடுகிறாள், கடைசியாய் மூவரும் ஓர் கொலை செய்துவிட்டு மதிபூஷணத்தின் பேரில் பழியைப் போட்டு அதற்கு சில திருஷ்டாந்தங்களை காட்டி விடுகிறார்கள். அதன்பின்னர் வக்கீல் வராததேவராவ், மங்களபூஷணத்தின் பிதாவாகிய குணசாகர முதலியாரும் இக்கேசுக்கு முன்னிற்கவும், சுதாரத்தினமாகிய மதிபூஷணத்தினால் மகாதந்திரமாக துப்பறிந்து கோர்ட்டார் முன்னிலையில் சரியான சாட்சி ருசுவைகாட்டி விடுகிறாள். அதற்குபின் மங்களபூஷணத்தோடும், மதிபூஷணத்தோடும் நி[illegible]சுந்தரம் சந்தோஷமாக வாழ்கிறார்கள். இது சுருக்கமாக காட்டினோம்

(ஓ)

விலாசம்:— மூராஹரி பிரெஸ்,

நெ. 20, கம்மாள்வார் தெரு முதல் சந்து, சென்னை.

# புதிய பதிப்பு புத்தகங்கள்.

## அலிபாபா அல்லது 40-திருடர்கள் சரித்திரம்.

**விலை அணா—4.**

இதில் அலிபாபா ஏழைத்தனமாயிருந்து காட்டில் திருடர்களி ளிடம் கொண்டுவந்த பொருளால் சுகமா யிருந்ததைப்பார்த்த தனது சகோதரன் காஸிம் பொறாமைக்கொண்டு தானும் பொருள் எடுத்துவர காட்டிற்போகி மடிவதும், பிறகு திருடர்கள் தந்திரத்தினால் அலிபாபாவை பிடிக்க வருவதும், அதை யறிந்த மார்ஜானா என்பவளால் திருடர்கள் மடிவதும் மிக வேடிக்கையாக இருக்கும்.

## அலிபாதுஷா சரித்திரம், இரண்டுபாகமும் விலை அணா-8

இச்சரித்திரத்தில் ஸ்டீமர் சரித்திரம் மிக ஆச்சரியமுண்டாக்கும். கதாநாயகர்கள் மற்றொரு தேசமடைந்து அங்கொரு அரசனால் துன்புற்று வேறுவேறாய்ப் பிரிந்து மறுபடியும் ஒன்றுசேருவது படிப்போருக்கு ஆனந்தத்தைத்தரும்.

## காளிதாஸன் சரித்திரம் விலை அணா—4.

ராஜகுமாரத்தியின் சபதத்தை நிராகரித்த மந்திரிகுமாரன் சூழ்ச்சியால் இடையனாகிய ராம னென்பவனைக்கொணர்ந்து கலியாணத்தை முடிக்க இதை யறிந்த ராஜகுமாரத்தி தனது புருஷனை காளிகோயிலுக்கனுப்ப காளியின் அருள்பெற்று வித்வானாகி காளிதாஸனென பெயர் பெற்ற கதையாவும் இதில் விளங்கும்.

## சக்குபாயி சரித்திரம் விலை அணா—4.

இதில் புராணத்தை அனுசரித்து பக்திமார்க்கத்தில் ஈடுபடுமாறு விருத்தங்கள், கீர்த்தனைகள், டோரா முதலிய வர்ணமெட்டுகளால் எழுதியது ஹரிகதை.

## சீகாளத்தி புராணம்-வசனம். படங்களுடன் விலை அ-6.

சீகாளத்தி க்ஷேத்திரத்தின் வைபவங்கள் மகாத்மியம் யாவும் தெற்றென விளங்கும்.

அகஸ்தியருக்கு சுப்ரமணியர் உபதேசித்த
தேவர்கள் சித்திபெற்ற மலையாள மாந்திரீக

## சிவ சுப்பிரமணியர் ஷடாக்ஷர மாலை. விலை அணா—4.

இது பூஜைசெய்து கோரிய வரங்களைப்பெற யந்திர மந்திர, பூஜா விதிகளுடன் அச்சிட்டிருக்கிறது இதிலுள்ள தியான சுலோகங்களை மனனம்செய்து இதில் காட்டிய யந்திரங்கள்போட்டு மூலமந்திரத்தை ஜபித்தால் சுப்பிரமணியக்கடவுள் பிரசன்னமாகி நீங்கள் கோரிய வரங்களை தந்தருளி ரக்ஷிப்பார் பரீக்ஷித்துப்பார்.

(தி) ☞ முராஹரி பிரெஸ்,
நெ 20, நம்மாள்வார் தெருவுமுதல் சந்து சென்னை.